பையனைப் பொறுத்தவரையில் செய்தி, இவன் அடிக்கடி காணுமல் போய்விடுவான், பிறகு போலீசாரால் மீட்கப்படுவான் என்பதாகும். என்ன இருந்தாலும் இதை அலட்சியப்படுத்துவதாக இல்லாமல், இவை பத்திரிகைச் செய்திகளாக இருந்தாலும், போலீசுக்கு உரிய புகார்கள் இதுவரையிலே வாமல் இருந்தாலும் கூட, இதிலே மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவிற்கு இந்தத் தீர்மானம் பயன்படும் என்ற அளவிலே இதை விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்த உறுதிக்குப் பின்னர் இந்த அவையை ஒத்தி வைத்து இப்பொருள்குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(4) அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"விதி 41 (3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.